மாலை முரசு

பக்கங்கள் 14+3

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 05 வெள்ளிக்கிழமை 20.12.2024 | அதிர்வு 141


## வாஸ் குணவர்தனவின் மரண தண்டனை உறுதி



முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பிரதிவாதிகள் ஐவருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை உறுதி

02


'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




### காசோலை நிதி மோசடிக் குற்றச்சாட்டில்

# ஈ.பி.டி.பியின் முன்னாள் எம்.பி. திலீபன் கைது!

## அவரின் பிரத்தியேகச் செயலாளரும் சிக்கினார்; இருவரும் இன்று சரீரப் பிணையில் விடுவிப்பு

(கி.வசந்தன்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட முன்னாள் அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் மற்றும் அவரது பிரத்தியேகச் செயலாளர் ஆகியோரை வவுனியா மாவட்ட நிதி மோசடிக் குற்றப் பிரிவுப் பொலிஸார் கைதுசெய்தனர். மேற்படி இருவரும் விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருந்த நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

02

# மத்திய குழுவில் இருந்து யாரையும் பொதுச்செயலாளர் நீக்க முடியாது!

## வழக்குத் தாக்கல் செய்ய இதுவே காரணம் என்கிறார் தமிழரசின் உறுப்பினர் சிவமோகன்



(கி.வசந்தன்)

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாப்பை மீறிச் செயற்பட முடியாது என்பதனால் பொதுச்செயலாளருக்கு மத்திய குழுவில் இருந்து யாரையும் நீக்க அதிகாரம் இல்லை. இதற்கான நீதியைப் பெறவே யாழ். நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்தேன்."

– இவ்வாறு வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான வைத்தியர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சிக்கு

02




# முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் மஜீதின் ஜனாஸா
## பெருந்திரளான மக்கள் பங்கேற்புடன் நல்லடக்கம்

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வருமான ஏ.எல். அப்துல் மஜீத் காலமானார்.

அவரது ஜனாஸா இன்று வெள்ளிக்கிழமை சாய்ந்தமருது அக்பர் பள்ளி மையவாடியில் பெருந்திரளான மக்கள் பங்கேற்புடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இரங்கல் உரை நிகழ்த்தியதுடன் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், எம்.எஸ். உதுமாலெப்பை, எம்.எஸ்.எம். நளீம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம். ஹரீஸ், எம்.எஸ். தௌபீக் உட்பட அரசியல் பிரமுகர்கள், உலமாக்கள், கல்வியியலாளர்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் ஜனாஸா நல்லடக்க நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ஈ.பி.டி.பியின்...**

15 இலட்சம் ரூபா காசோலை நிதி மோசடி தொடர்பில் முன்னாள் எம்.பி. திலீபனின் பிரத்தியேகச் செயலாளரை நேற்று வியாழக்கிழமை மாலை வவுனியா மாவட்ட நிதி மோசடிக் குற்றப் பிரிவு பொலிஸார் கைது செய்தனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து முன்னாள் எம்.பி. கு.திலீபன் இன்று காலை கைது செய்யப்பட்டார்.

மேற்படி இருவரையும் வவுனியா நீதிமன்றத்தில் பொலிஸார் முற்படுத்தியிருந்தனர். இதன்போது அவர்கள் 3 இலட்சம் ரூபா பணத்தை முறைப்பாட்டாளருக்குச் செலுத்திய நிலையில், இருவரையும் சரீரப் பிணையில் நீதிமன்றம் விடுவித்தது.

**மத்திய குழுவில்...**

எதிராகத்தாக்கல் செய்த வழக்கு தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாப்பின் அடிப்படையில் மத்திய குழு உறுப்பினர்கள் எவரையும் நிறுத்துவதற்கு அதிகாரம் இல்லை. மாவட்ட கிளை, பிரதேச கிளையில் எவரேனும் தவறு செய்திருந்தால் மாத்திரமே அது தொடர்பான முறைப்பாடு கிடைத்தால் நிறுத்துவதற்கான அதிகாரம் இருக்கின்றது.

அதை விடுத்து மத்திய குழுவில் இருக்கும் யாரையும் நிறுத்துவதற்குப் பொதுச்செயலாளருக்கு அதிகாரம் இல்லை. அது தவிர தமிழரசுக் கட்சி கூட்டம் கூடுவதாக இருந்தால் தலைவரின் கலந்துரையாடலோடு நிகழ்ச்சி நிரலைத் தலைவரிடம் அனுப்பி அதைத் தலைவர் ஏற்றுக்கொண்டு கூட்டம் கூடுவதற்கு அனுமதியைப் பெற வேண்டும் என்பதுடன் அந்த நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் கூட்டத்தை நடத்தலாம் எனத் தலைவர் கூறியதன் பின்னரே கூட்டம் கூடலாம்.

அத்துடன் தலைவரின் அனுமதிக்குப் பின்னரே ஏனையவருக்கும் அந்த நிகழ்ச்சி நிரலையும் கூட்டத்துக்கான அழைப்பையும் அனுப்பலாம். இவ்வாறு தான் யாப்பு கூறுகின்றது.

தலைவர் கட்சியை வழி நடத்துபவர். பொதுச்செயலாளர் என்பவர் கூறுவதைச் செய்பவராகத்தான் இருப்பார். இவ்வாறு தெளிவாக யாப்பில் கூறப்பட்டுள்ளது. எனவே, யாப்பை மீறி அனைத்தையும் செயற்படுத்த விட முடியாது.

அதனை மையப்படுத்தியே யாழ். நீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல் செய்திருந்தேன். குறித்த வழக்கு தொடர்பான விசாரணை சில நாட்களில் இடம்பறும்."

- என்றார்.

**வாஸ் குணவர்தனவின்...**

செய்யப்பட்டுள்ளது

தொழிலதிபர் முகமது ஷியாம் கொலை வழக்கு தொடர்பில் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பிரதிவாதிகள் ஐவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய ஆயம் விதித்த மரண தண்டனையை உயர் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது என்று பிரதிவாதிகளுக்கு இன்று கொழும்பு மேல் நீதிமன்றில் அறிவிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை அறிவிப்பதற்காக முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன, அவரது புதல்வர் ரவிந்து குணவர்த்தன உள்ளிட்ட பிரதிவாதிகளைச் சிறைச்சாலை அதிகாரிகள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்

இந்தத் தண்டனைக்கு எதிராகப் பிரதிவாதிகள் முன்வைத்த மேன்முறையீட்டு மனுக்களை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது என்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே பிரதிவாதிகளுக்கு அறிவித்தார்.

பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் சமர்ப்பணங்களை முன்வைத்தார்

மேலும் பிரதிவாதிகளுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்றும் திகதியை உயர் நீதிமன்றம் குறிப்பிடவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

குற்றவாளிகள் ஜனாதிபதியின் மன்னிப்பை எதிர்பார்க்கும் பட்சத்தில், தண்டனையை நிறைவேற்றும் திகதி அவர்களுக்கு மிகவும் முக்கியமானது எனவும் சுட்டிக்காட்டிய சட்டத்தரணி, அதற்கமைய தண்டனையை நிறைவேற்றும் திகதி தொடர்பில் உத்தரவு பிறப்பிக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

ஆனால், இது தொடர்பில் உயர் நீதிமன்றமே முடிவெடுக்க முடியும் எனவும், இது தொடர்பில் தாம் உத்தரவு பிறப்பிக்க முடியாது எனவும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே தெரிவித்தார்.

# முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் வெற்றிடங்களை விரைந்து நிரப்புங்கள்!

## முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற் சங்கம் கோரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண சபையில் உள்ள முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தொழிற்சங்கத்தின் தலைவர் ஏ. ஜி. முபாரக், கிழக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்,

சுமார் 350 வெற்றிடங்கள் நிலவுகின்றன. இதில் 30 வீதம் தற்போது சிறு பணியாளர்களாகக் கொண்டவர்களைக் கொண்டு நிரப்புதல் வேண்டும். இது அவர்களின் பதவி உயர்வுக்கான ஒரு வாய்ப்பாகும். மத்திய அரசு கடந்த மாதம் பரீட்சை நடத்திப் பெறுபேறுகளை வெளியிட்டுள்ளது. இதற்கு முன்பு ஒரு தடவையும் ஆள்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். வேறு மாகாணங்களிலும் ஆள்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். கிழக்கில் ஆட்கள் சேர்க்கப்படவில்லை.

மேலும் அதில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் வெற்றிடம் நிரப்பப்படாததால் சேவையில் உள்ளவர்கள் இடமாற்றம் பெறுவதற்கு தடங்கல் ஏற்பட்டுள்ளது. வேலைப் பழுவும் அதிகரித்துள்ளது.- என்றுள்ளது.



# கடற்றொழிலுக்குச் சென்றிருந்த போது தமிழ் நாட்டில் கரையொதுங்கிய மீனவர்களை அழைத்து வாருங்கள்

## நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரிடம் கோரிக்கை

(எஸ்.அஷ்ரப்கான், கே. எ. ஹமீட்)

அட்டாளைச்சேனை கப்பலடி மீனவர் துறையில் இருந்தும் பருத்தித்துறை மீனவர் துறையில் இருந்தும் கடற்றொழிலுக்காக கடலுக்கு சென்ற போது தமிழ் நாட்டில் கடந்த ஜுலை மாதம் 07 ஆம் திகதி கரை ஒதுங்கிய மீனவர்களை இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன்- நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்றது. இதன்போது இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனையைச் சேர்ந்த கே.ஆர்.நிஸ்பர் என்பவர் காணாமல் போயுள்ளார். இந்த மீனவர்களில் அட்டாளைச்சேனையில் இருந்து சென்ற இர்பான் எனும் மீனவர் சென்னை தூதரகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை மீனவர் துறையில் இருந்து மீன் பிடிக்க கடலுக்கு சென்ற மீனவர்களான அட்டாளைச்சேனை சேர்ந்த எம்.எப்.முஸ்தகீன், வடமாகாணத்தை சேர்ந்த என்.குணபாலசிங்கம், ஏ.இராதாகிருஸ்ணன், எம்.பிரமசிறி ஆகியோர் கொட்டப்பட்டு சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அங்குள்ள வட கிழக்கு மாகாணத்தை சேர்ந்த மீனவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுங்கள்.- என்றார்.

இந்தக் கோரிக்கைகளுக்கு பதிலளித்த கடற்றொழில் அமைச்சர், வட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் நாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 05 மீனவர்களையும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வார் என்று தெரிவித்தார்.

கடந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட மீனவர்களது படகுகள், இயந்திரங்கள் தொடர்பாக கல்முனை கடற்றொழில் பணிப்பாளரின் அறிக்கை கிடைத்ததும் நஷ்டஈடு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்றும் தெரிவித்தார்.




# யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் உலகம் அமைதி காண தியான நிகழ்வு

சர்வதேச தியானதினம் ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் 21 ஆம் திகதி கொண்டாடப்படவேண்டும் என்று இந்திய துணைக்கண்டங்களின் வேண்டுகோளை ஏற்று ஐக்கியநாட்டு அமைப்பினர் இந்த ஆண்டுமுதல் சர்வதேச தியானதினத்தை அனுட்டிக் கும்படி பிரகடனப்படுத்தியுள்ளார்கள். நாளை சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ்ப்பாணம் அறிவுத்திருக் கோவிலிலும் இவ்விழா சிறப்பாக மேற்கொள்ளப்படவுள்ளது.

ஆசான் அருட்த்தந்தை வேதாத்திரி மகரிஷி அருளிய மனவளக்கலை பயிற்சிகள் மற்றும் தியானங்கள் இலங்கையில் அறிமுகமாகி இருபது வருடங்கள் பூர்த்தியாகும் இந்தக் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் - யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவி லிலும் - யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையினால் 15 வருடகாலமாக பயிற்சிகள் நடை பெற்றுவருகின்றன.

உலக அமைதியே ஆசானின் கனவு என்பது யாவரும் அறிந்ததே. அதற்கான அடிப்படை தனிமனித அமைதியாகும். தனிமனிதன் அமைதி யடைய தியானம் ஒன்றே ஒரேயொரு வழி என அறிந்த மகரிஷி அதனை சிறப்பாக மேற்கொள்வதற்கான அடிப் படை பயிற்சிகளையும் உயிரை வள மாக்க காயகல்ப பயிற்சினை எளி மைப்படுத்தியும் மனவளக்கலை யோகாவை வழங்கியுள்ளார். அந்த வகையில் வேதாத்திரிமகரிஷி வேண் டிய உலகசமாதானத்திற்கான உலக அங்கீகாரமாக அமைதிக்கான உலக ஆரம்பநிகழ்வாக இந்தத் தினம் அமையப்போகின்றது.

எனவே நாளை அனைவரும் பங்குபற்றி இந்நிகழ்வினை நிறை வாக கொண்டாடுவோம்,

அணிதிரண்டு வாருங்கள் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்வு பற்றிய மேலதிக விவரங் களை 021 222 2772 என்ற தொலைபேசி மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

# ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் நிந்தவூரில் கைது

(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப் பொருளுடன் மல்வத்தை விசேட அதிரடிப் படையினரினால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சட்ட நடவடிக்கைக்காக நிந்தவூர் பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவில் உள்ள புற நகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சந்தேகத்துக்கு இடமாக நேற்று (19) இரவு நடமாடிய 34 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரை சோதனை செய்த விசேட அதிரடிப்படையினர் 2 மில்லி 450 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளை மீட்டுள்ளனர்.

இதன் போது நீண்ட காலமாகக் குறித்த சந்தேக நபர் இந்தப் பகுதியில் ஐஸ் போதைப் பொருளை விநியோகித்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது. அத்துடன் போதைப் பொருளுக்கு அடிமையாகி உள்ளார் என்று விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

அந்த நபர் நிந்தவூர் 23 பிரிவைச் சேர்ந்தவர் என்பதுடன் கைதான நிலையில் சான்று பொருள்களுடன் நிந்தவூர் பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினரால் ஒப்படைக் கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

# Gunams super market super deal

## 20, 21, 22/12/2024

100$ க்கு மேல் கொள்வனவு செய்து 10lb Kushbu basmathi rice bag யை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்




1139 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அவசரக் கோல முடிவா?

தற்போது நாட்டின் பொருளாதாரம் ஓரளவு ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளதால் வாகனங்களின் இறக்குமதியை மீண்டும் ஆரம்பிக்க வேண்டிய கட்டம் வந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இதே போன்ற கருத்தை முன்வைத்து, அதனடிப்படையில் வாகன இறக்குமதிக்கு மீள அனுமதிக்கும் சூழல் வந்துவிட்டதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவும் நாட்டுக்கு அறிவிப்பு விடுத்திருக்கின்றார்.

தனியார் வாகன இறக்குமதிக்கு அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து அனுமதி வழங்குவதாக அவர் நாடாளுமன்றத்தில் அறிவித்திருக்கின்றார்.

‘‘வாகன இறக்குமதியைக் கொண்டு ஒரு தொழிற் துறை உள்ளது. தொழில் முனைவோர் உள்ளனர். எனவே வாகன இறக்குமதியை நீண்ட காலத்திற்கு தடை செய்ய முடியாது. அதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். இதன்படி மூன்று கட்டங்களாக வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. பயணிகள் போக்குவரத்துக்கான வாகனங்கள், சிறப்பு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் தனியார் பயன்பாட்டிற்கான வாகனங்கள் உள்ளிட்டவை கட்டம் கட்டமாக இறக்குமதி செய்யப்படும்’’ என அவர் குறிப்பிட்டுள்ளார். வாகனத் இறக்குமதித் தடையை நீக்குவதான வர்த்தமானி அறிவிப்பையும் அவர் விடுத்திருக்கின்றார்.

சர்வதேச நாணய நிதியம் நிர்ணயித்த இலக்குகளை விஞ்சி - தாண்டி - இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு தோராயமாக 6.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது என மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் வெளிநாட்டு கையிருப்பில் பாதிப்பு ஏற்படாத வகையில் வாகன இறக்குமதி மேற்கொள்ளப்படும் என்று உறுதி கூறும் அவர், பொருளாதாரத்தை மீட்டெடுப்பதில் வாகன இறக்குமதி அவசியமான ஒன்று எனவும் வாகன இறக்குமதி அதிகமாக நடந்தால் வரி விதிப்பு போன்ற நடவடிக்கைகளின் மூலம் அதனை கட்டுப்படுத்தும் திறன் அரசாங்கத்திற்கு இருப்பதாகவும் குறிப்பிடுகின்றார்.

தங்களின் செயல் திறமையைத் தாங்களே மெச்சும் விதத்தில் அவர்கள் தரும் சுயசான்றிதழ்கள் மகிழ்ச்சியை தருவனவாக இருந்தாலும் கூட, பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியை அள்ளிச் செல்லக்கூடிய வாகன இறக்குமதிக்கு இவ்வளவு நேரத்தோடு அனுமதி கொடுக்கக் கூடிய அளவுக்கு நாட்டின் பொருளாதாரம் மீண்டெழுந்து விட்டதா என்று சந்தேகம் பொருளாதார நிபுணர்களுக்கு ஏற்பட்டிருப்பதும் கவனிக்கப்பட வேண்டியுள்ளதாக இருக்கின்றது.

நாடு செலுத்தத் தவறியுள்ள வெளிநாட்டுக் கடன்களுக்கான தவணைக் கொடுப்பனவுகளை மீளச் செலுத்தும் நிலைமை இன்னும் சாத்தியமாகவில்லை. 2028 வரை அதற்குக் கால அவகாசத்தை நாடு கோரியிருக்கின்றது.

தவிரவும், எதிர்பாராத விதத்தில் நெல், தேங்காய், உப்பு போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு, அவற்றையும் அந்நிய செலாவணியை விரயமாக்கி இறக்குமதி செய்ய வேண்டிய இக்கட்டு ஏற்பட்டுள்ளது.

பொதுவாகவே பொருள்களின் - குறிப்பாக அத்தியாவசியப் பாவனைப் பொருள்களின் - விலைகள் எகிறி வருகின்றன. அவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடிய பொருளாதார திருப்தி நிலை இன்னும் ஏற்படவில்லை என்பதே பொதுவான அபிப்பிராயமாகும்.

நாட்டிலிருந்து பெரு எண்ணிக்கையில் வெளியேறிய தொழிலாளர்கள், நிபுணத்துவப் பணியாளர்கள் போன்றோர் வெளிநாட்டிலிருந்து உழைத்து அனுப்பும் பணம் மற்றும் சுற்றுலாத்துறை வருமானம் ஆகியவை மூலம் கிட்டிய அந்நிய செலாவணி மட்டும் நமது கையிருப்பை ஓரளவுக்கு நிரப்பிக் கொண்டிருக்கின்றது. அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் ஸ்திரப்படுத்துவதற்கு முன்னர் அவசரப்பட்டு வாகன இறக்குமதிக்கான அனுமதியை அரசு அளித்து விட்டதோ என்ற சந்தேகம் பொருளாதார நிபுணர்கள் மத்தியிலும் கூட நிலவுகின்றது.

அரசின் இந்த அவசரக் கோல முடிவின் பெறுபேறுகளை - பாதிப்புகளை - அல்லது நன்மைகளை - அரசுதான் எதிர்காலத்தில் எதிர்கொள்ளப் போகின்றது.





# 3லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியில் வெள்ள நிவாரண உதவிகள் பூநகரிக்கு!

## சந்நிதியான் ஆச்சிரமம் நேற்று வழங்கியது

இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட பூநகரி தேசத்தில் உள்ள தெளிகரை, செம்பன்குன்று கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட 75 குடும்பங்களுக்கு 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

தெளிகரைப் பிள்ளையார் ஆலயத்தில் வைத்து நேற்று வியாழக்கிழமை இவை வழங்கப்பட்டன.

இந்த உதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் இணைந்து நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.





# திருமலை மீடியா போரத்தின் ஊடகவிருது வழங்கல் - 2024

(அபு அலா )

திருகோணமலை மீடியா போரத்தின் 5 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, மீடியா போரத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக விருது - 2024 வழங்கும் விழாவும், பாடசாலை மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வும் கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி மாலை 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

போரத்தின் தலைவர் எச்.எம்.ஹலால்தீன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி கலந்து கொள்ளவுள்ளார்.

கிண்ணியா நகரசபைச் செயலாளர் முகம்மது அனீஸ் கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் இஷ்ட்.எம்.எம். நழீம், கிண்ணியாவை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட எம்.வி.எம்.பௌண்டேஷன் உரிமையாளர் எம்.வி.எம்.பௌமி, உலமா சபை மற்றும் சூரா சபை உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது, கடந்த பல வருடங்களாக ஊடகத்துறைக்கு பெரும் பங்காற்றிய 43 ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கு ஊடக விருதும் வழங்கப்படவுள்ளன என்று போரத்தின் செயலாளர் தெரிவித்தார்.



இதில் ஊடக விருது, சமூக தாரகை விருது என்பன வழங்கப்படவுள்ளன.

போரத்துக்குத் தொடர்ச்சியாக செய்திகளை வழங்கிய மற்றும் பிரதேசத்தில் நடக்கின்ற செய்திகளை உடனுக்குடன் வழங்கி வந்த மூன்று ஊடகவியலாளர்கள் தங்கப் பதக்கம் அணிவிக்கப்பட்டுக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவ்விருதுகள் தொடர்பில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள போரத்தின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரை 0779919368, 0755979791 என்ற தொலைபேசி இலக்கங்களை ஊடாகத் தொடர்பு கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளனர்.




# வடக்கு பண்பாட்டு பெருவிழா மன்னாரில் இடம்பெற்றது

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு ஏற்பாடு செய்த மாகாண பண்பாட்டுப் பெருவிழாவும், கண்காட்சியும்கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றன.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

மன்னார் பிரதான பாலத்தில் இருந்து பண்பாட்டு ஊர்திகள், கலை ஆற்றுகைகள் பண்பாட்டுப் பவனியாக விழா மண்டபமான மன்னார் நகர சபை மண்டபம் நோக்கிச் சென்றன.

அதனைத் தொடர்ந்து வருகை தந்த விருந்தினர்களால் பாரம்பரிய பொருள்கள் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு ஏற்பாடு செய்த மாகாண பண்பாட்டு பெருவிழா நிகழ்வு கலைத் தவசி கலைஞர் செ.செபமாலை அரங்கில் இடம்பெற்றது. தமிழ்த் தாய்க்கு வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மலர் மாலை அணிவித்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார் .

அதனைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து வடமாகாண கல்வி பண்பாட்ட லுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு ஏற்பாடு செய்த மாகாண பண்பாட்டுப் பெருவிழாவை ஒட்டிய வடந்தை-2024 எனும் நூல் வைபவ ரீதியாக வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து கலைக்குரிசில் விருது வழங்குதல், 2023 ஆம் ஆண்டுக்கான




வடக்கு மாகாண சிறந்த நூலுக்கான பரிசு வழங்குதல் மற்றும் இளங்கலைஞர் விருது வழங்குதல் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம் பெற்றன. நிகழ்வில் வடமாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களையும் பிரதி பலிக்கும் வகையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.







# கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த ஆஸ்பத்திரிக்குக் குருதிக் கொடை

(எஸ்.அஷ்ரப்கான்)

அஷ்ரப் ஞாபகர்த்த வைத்தியசாலையின் இரத்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்குடன் கல்முனை யங் பேட்ஸ் ஜனாஸா நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாம் இடம்பெற்றது.

கல்முனை கடற்கரை வீதி, அல்-புஸ்ரா ஆழ்கடல் மீனவர் சங்க அலுவலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை (20) இரத்ததானம் இடம்பெற்றது.

அமைப்பின் தலைவர் எம்.எம். மர்சூக் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் தர முகாமைத்துவ வைத்திய அதிகாரியும், பதில் வைத்திய அத்தியட்சகருமான ஏ.ஆர். எம்.ஹாரிஸ், பொது சுகாதாரப் பிரிவு மற்றும் திட்டமிடல் பிரிவு வைத்திய அதிகாரி ஏ.எல். பாறூக் ஆகியோருடன் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ரீ. மருதராஜன், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் கல்முனை கிளை தலைவர் மௌலவி முர்ஷித் முப்தி ஆகியோரும் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இங்கு அமைப்பின் உயர் பீட உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கினர்.





# போதைப்பொருள் தடுப்பு தொடர்பில் ஊடக அடிப்படையிலான செயலமர்வு

(பாறுக் ஷிஹான்)

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஏற்பாட்டில் ஊடக அடிப்படையிலான போதைப் பொருள் தடுப்புச் செயலமர்வு நேற்று (19) சம்மாந்துறை பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண இணைப்பாளர் எம்.எம். ஜி.பி.எம். ரஷாத் ஒருங்கிணைப்பில் போதைப் பொருள் தடுப்பு மற்றும் ஊடகத்துறை சார்ந்த நிபுணர்களின் நுண்ணறிவு விளக்கங்கள் இந்த செயலமர்வில் இடம்பெற்றன. விவாதங்கள் மற்றும் கேள்வி பதில் அமர்வுகளும் நடைபெற்றன.

போதைப் பொருள் துஷ்பிரயோகம் மற்றும் அதன் அழிவுகரமான விளைவுகள் குறித்துப் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த செயலமர்வில் ஊடகவியலாளர்களின் பங்கேற்பானது போதைப் பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்குவதற்கான எங்களின் கூட்டு முயற்சிகளுக்கு கணிசமான பங்களிப்பை வழங்கும் என தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண இணைப்பாளர் எம்.எம். ஜி.பி.எம். ரஷாத் தெரிவித்தார்.





இந்த நிகழ்வை சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி நௌபர் ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ராசிக் நபாயிஸ், ஏ.ஜெ.எம். இக்ராம் உட்பட ஊடகவியலாளர்கள், சமூக வலைத்தள செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# அட்டாளைச்சேனையில் பிரதேச கலை, கலாச்சாரக் கௌரவிப்பு!

(எம். எப். நவாஸ் )

தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தால் பிரதேச கலை, கலாச்சார, சகவாழ்வு மற்றும் கௌரவிப்பு விழா நேற்று (19) அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் பி. ரீ. எம்.இர்பான் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். ஜெகராஜன் மற்றும் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம் ஏ சி. அஹமட் ஷாபிர், உதவி பிரதேச செயலாளர் எம். ஏ. சி. அஹமட் நஸீல், உதவி திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மூவின மக்களினதும் பாரம்பரிய கலை, கலாச்சார நிகழ்வுகள் இடம் பெற்றன. ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் துறை சார்ந்த பிரிவினருக்கு கௌரவிப்பும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

பிரதேச செயலாளரால் அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் கௌரவிக்கப்பட்டார்.





# இந்திய மீனவரால் ஏற்படும் பாதிப்பு தொடர்பில் ஜனாதிபதியின் கருத்து எழுத்து மூலம் இல்லை!

## ஜனாதிபதியின் கருத்தை வரவேற்கிறோம் என்றும் வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் தெரிவிப்பு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இந்திய மீனவர்களின் வருகையாலும் அவர்கள் முன்னெடுக்கும் சட்டவிரோத மீன்பிடி முறைமையாலும் இலங்கை மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்ற விடயத்தை இந்தியா சென்ற ஜனாதிபதி அநுர குமார திஸ ாநாயக்க இந்தியப் பிரதமரிடம் பதிவு செய்துள்ளார். இதனை வரவேற்கிறோம்.

எனினும் இந்தக் கருத்து எழுத்து மூலம் இல்லை என்று வடமாகாணக் கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று வியாழக்கிழமை (19) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை ஜனாதிபதிக்கு இந்திய அரசு வழங்கிய கௌரவத்தை நாங்கள் மதிக்கிறோம். நாங்களும் மகிழ்ச்சி அடைகிறோம். இந்திய மக்களும் மகிழ்ச்சியாக இருக்கி றார்கள். அந்த மகிழ்ச்சிக்கு அப்பால் மீனவர்களாகிய நாங் கள்எதிர்பார்க்கும்விடயங்கள்என்னநிறைவேற்றப்பட்டுள்ளன. எதிர் காலத்தில் வட பகுதி மீனவர்களாக இருக்கட்டும், தேசிய ரீதியில் இலங்கை மீனவர்களாக இருக்கட்டும், அவர்களின் வாழ்வாதாரம் எவ்வாறு இருக்கப்போகின்றது என்பது தொடர்பாக நாங்கள் செயற்பாடுகளை நகர்த்த வேண்டியுள்ளது.

இந்திய பிரதமருக்கும், இலங்கை ஜனாதிபதிக்கும் இடையில் இடம் பெற்ற பேச்சு உடன்படிக்கையில் பல்வேறு விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.



இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி குறித்து பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டாலும், மீனவர்கள் விடயம் தொடர்பாக நாங்கள் ஆராய வேண்டிய நிலை உள்ளது.

எனினும் ஜனாதிபதி உறுதியான கருத்தை அங்கு பதிவு செய்துள்ளார். இந்திய மீனவர்களின் வருகையால் அவர்கள் முன்னெடுக்கும் சட்டவிரோத மீன்பிடி முறைமையால் இலங்கை மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற விடயத்தைப் பதிவு செய்துள்ளார். ஆனால் அது எழுத்து வடிவில் இல்லை.வெறும் கலந்துரையாடலாகவே அமைந் துள்ளது.– என்றார்.

குறித்த ஊடக சந்திப்பில் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மன்னார் மாவட்ட பிரதிநிதி அன்ரனி சங்கர், மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்கத்தின் பிரதேச தலைவர் ஜே.யோகராஜ் ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவித்தனர்.



# நிலாவெளி விவசாயிகளுக்கு இலவசமாக பசளை வழங்கல்

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்ட நிலா வெளி கமநல சேவை பகுதிக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக பசளை விநியோகிக்கப்பட்டுள்ளது.

இந்த உர விநியோகம் நேற்று (19) நிலாவெளி கமநல சேவை நிலையத் தில் வைத்து பதில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ரமேஷ் தலை மையில் இடம்பெற்றது.

3417 ஏக்கர் பெரும்போக நெற் செய்கைக்காக இது வழங்கப்பட்டது. மேலும் சிறு போகம், பெரும் போகத் துக்கு ஒரு ஏக்கருக்கு 12 கிலோவும் மானாவரிக்கு ஒரு ஏக்கருக்கு 10 கிலோவும் வழங்கி வைக்கப்பட்டது.

12 கமக்கார அமைப்புக்களை சேர்ந்த விவசாயிகளுக்கு இந்த இலவச பசளை வழங்கி வைக்கப்பட்டது.



# வீதி பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வு கிண்ணியாவில்

(எச் எம் ஹலால்தீன் )

வீதி பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்வு கிண்ணியா நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிண்ணியா நகர சபை செயலாளர் முகமது அனீஸ் தலைமையின் நடைபெற்ற இந்த நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், கிண்ணியா பிரதேச செயலாளர், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள், நிறுவனங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.



வீதி போக்குவரத்தில் ஏற்படும் இடையூறுகள் சம்பந்தமாகவும், பாடசாலை மாணவர்கள் போக்குவரத்துச் செய்வதில் ஏற்பாடும் இடர்பாடுகள், எவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும், வீதி விபத்துக்களில் இருந்து எவ்வாறு சமூகத்தைப் பாதுகாக்கலாம் முதலான பல்வேறு விடயங்கள் இதன் போது பேசப்பட்டன.

போக்குவரத்து செய்வதில் ஏற்படும் நெருக்கடிகளைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமான தீர்மானங்களும் இதன் போது எடுக்கப்பட்டன.






## பொத்துவிலில் இலவச மருத்துவ முகாம்!

(ஏ.எல்.றியாஸ்)

பொத்துவில் பிரதேச மக்களின் நலன்கருதி பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகமும் இணைந்து நடத்திய மருத்துவ முகாம் நேற்று முன்தினம் (18) சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த மருத்துவ முகாமில் தொற்றா நோய் தொடர்பான பரிசோதனைகள் இடம்பெற்றன. நோயாளிகளின் இரத்தத்திலுள்ள சீனியினளவு, குருதியமுத்தம், கண் பரிசோதனைகள், பல் பரிசோதனைகள் போன்றன மேற்கொள்ளப்பட்டு சிகிச்சைகளும் வழங்கப்பட்டன.

இதன்போது பொத்துவில் பிரதேசத்தை சேர்ந்த மூவின மக்களும் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இந்த மருத்துவ முகாமில் கலந்து கொண்ட பொது மக்கள் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கும் நன்றி தெரிவித்தனர்.

## மார்கழி என்பது மனநிறை மாதம் !

மாதவன் மலரடி போற்றிடும் மாதம்
கோதையும் தமிழைக் கொட்டிய மாதம்
குவலயம் குளிர்மையாய் ஆகிடும் மாதம்
வாசகர் ஈசனைப் பாடிய மாதம்

மகேசனை மங்கையர் போற்றிடும் மாதம்
பூவெலாம் பனித்துகள் அமர்ந்திடு மாதம்
புவியினைத் தேவரும் விரும்பிடு மாதம்
வைகறை யாவரும் விழித்திடும் காலம்

மனமெலாம் இறையை இருத்திடு காலம்
பொய்யெனும் மாயைப் போக்கிட இறையை
மெய்யடியார்கள் வேண்டிய காலம்
உணர்வுடன் இறையை உளமதில் இருத்தியே

துயிலைக் களைந்திட தொடக்குவார் மங்கைகள்
பரமனைப் பாடியே தெருவெலாம் வருவதால்
பக்தியின் பேரொளி பரவிடும் காலமே
ஆலயம் எங்கணும் தீபங்கள் ஒளிர்விடும்

அடியவர் அனைவரும் ஆலயம் ஏகுவார்
காலையில் கதிரவன் எழுந்திடு முன்னரே
கனிவுடன் இசைத்தமிழ் காற்றிலே கலந்திடும்
மாதவன் கோவிலில் பாசுரம் ஒலிக்கும்

மகேசன் கோவிலில் வாசகம் ஒலிக்கும்
சைவம் வைணவம் சங்கமம் ஆகும்
சன்மார்க்க வழியை மார்கழி வழங்கும்

பீடை என்பது பொருத்தமே அல்ல
பீடுடை என்பதே பெரிதும் பொருத்தம்
மார்கழி தேவர்க்கு உகந்த நல்மாதம்
மனமதில் இருத்தியே பரவுவோம் இறையை!

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.





# அட்டாளைச்சேனை கல்வியல் கல்லூரியின் கல்விச் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வு

## கல்வி அமைச்சின் உயர் மட்டக் குழு விஜயம்

(எம்.ஏ.றமீஸ்)

கல்வி அமைச்சின் உயர் மட்டக்குழு அட்டாளைச்சேனை தேசிய கல்வி யல் கல்லூரிக்கு தரிசிப்பு விஜயம் ஒன்றை நேற்று முன்தினம் (18) மேற் கொண்டது.

கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விக்கு பொறுப்பான பிரதம ஆணையாளர் திருமதி பீ.ஜீ.ஐ. களனி ஹேமாலி தலைமையிலான குழுவினரே இவ்வாறு விஜயம் மேற்கொண்டனர்.

அட்டாளைச்சேனை தேசிய கல்வியல் கல்லூரியின் கல்விச் செயற்பாடுகள் மற்றும் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் உள்ளிட்ட கல்லூரியின் தேவைப்பாடுகள் போன்றவற்றை அவதானிக்கும் வகையில் இந்தக் குழுவினர் இந்த விஜயத்தை மேற்கொண்டனர்.

இதன்போது ஆசிரியர் பயிலுனர்கள், விரிவுரையாளர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள் போன்றோரை இந்தக் குழுவினர் தனித்தனியாகக் கலந்துரையாடி பல்வேறான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்கியிருந்தனர்.

இது தவிர, இந்தக் கல்லூரியின் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக தமது முழுமையான பங்களிப்புகளையும் வழங்கவுள்ளனர் என்று இந்தக் குழுவினர் உறுதியளித்தனர்.

இதன்போது கல்லூரியின் பீடாதிபதி சட்டத்தரணி கே.புண்ணியமூர்த்தி உள்ளிட்ட உப பீடாதிபதிகள், விரிவுரை இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர் பயிலுநர்கள் போன்றோர் கலந்து கொண்டனர்.






# அமித் ஷாவின் கருத்துக்கு கண்டனம்: சென்னையில் வி.சி.க. ரயில் மறியல்

சட்டமேதை அம்பேத்கர் குறித்த மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்து சென்னயில் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் இன்று ரயில் மறியலில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் மத்திய அமைச்சர் அமித் ஷா பேசும்போது, "அம்பேத்கர் குறித்து பேசுவது ஃபேஷனாகிவிட்டது. அதற்கு பதிலாக கடவுளின் பெயரை உச்சரித்தால் புண்ணியமாவது கிடைக்கும். அம்பேத்கர் பெயரை மேலும் 100 முறை உச்சரிக்கட்டும். ஆனால் அவர் கருத்து குறித்தும் அவர்கள் பேச வேண்டும்" என்று கூறியிருந்தார்.

இப்பேச்சுக்கு கண்டனம் தெரிவித்து தமிழகம் முழுவதும் இண்டியா கூட்டணி கட்சிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன. இதன் பகுதியாக சென்னை, சைதாப்பேட்டையில் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் ரயில் மறியலில் ஈடுபட்டனர்.

அக்கட்சியின் துணை பொதுச் செயலாளர் வன்னியரசு தலைமையில், மாவட்டச் செயலாளர் ஜேக்கப் ஒருங்கிணைப்பில் தண்டவாளம் வழியாக நுழைந்த 50 இற்கும் மேற்பட்டோர் கடற்கரை நோக்கி செல்லும் ரயிலை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து அவர்கள் தண்டவாளத்தில் அமர்ந்தும் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர். பின்னர் பொலிஸார் அவர்களை தண்டவாளத்தில் இருந்து அப்புறப்படுத்தி கைது செய்தனர்.

தொடர்ந்து, நடைமேடையில் கண்டன முழக்கங்களை எழுப்பியவாறு சென்று நிலையத்தை விட்டு வி.சி.கவினர் வெளியேறினர். இதனால், தாம்பரத்தில் இருந்து கடற்கரை செல்லும் தடத்தில் 20 நிமிடங்களுக்கு மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.





# ஜெய்ப்பூரில் பாரிய தீ விபத்து: ஐவர் உயிரிழப்பு; 24 பேர் காயம்

ஜெய்ப்பூரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

24 பேர் காயமடைந்துள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜெய்ப்பூர் - அஜ்மீர் நெடுஞ்சாலையில் இன்று காலை ஒரு டிரக் வாகனம், எரிவாயு ஏற்றிச் சென்ற டேங்கருடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதனால், நகரின் பாங்க்ரோட்டா பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தீ பரவியதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தினை அடுத்து, எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல வாகனங்களும் தீயில் எரிந்து நாசமாகின.

எரிவாயு ஏற்றிச் சென்ற டேங்கர் மீது மோதிய லொறியில் இரசாயம் இருந்ததே இந்த தீ விபத்துக்கான காரணம் என ஆரம்பக கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

தீ விபத்து குறித்து தகவல் கிடைத்ததும், 20 தீயணைப்பு வாகனங்கள் விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டன.

மேலும் காயமடைந்தவர்கள் ஜெய்ப்பூரில் உள்ள சவாய் மான் சிங் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைக்க முயன்றபோது எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து பாரிய தீப்பிழம்புகள் வெளியேறின என கூறப்படுகிறது. இந்த சம்பவத்திற்குப் பிறகு, ராஜஸ்தான் முதல்வர் பஜன்லால் சர்மா, சவாய் மான் சிங் வைத்திய சாலைக்கு சென்று காயமடைந்தவர்களுக்கு சிறந்த சிகிச்சையை உறுதி செய்ய அதிகாரிகளுக்கு உத்தர விட்டார்.









# பாகிஸ்தானின் 4 நிறுவனங்களுக்கு அமெரிக்கா பொருளாதாரத் தடை

நீண்ட தூரம் சென்று தாக்குதல் நடத்தும் ஏவுகணை தயாரிப்பு திட்டத்தில் ஈடுபட்டுள்ள பாகிஸ்தானைச் சேர்ந்த 4 நிறுவனங்களுக்கு எதிராக அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது. இவ்விடயம் தொடர்பில் அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கை யொன்றில்,

பாகிஸ்தானின் அணு ஆயுதம் கொண்ட நீண்டதூர ஏவுகணைத் திட்டம் தொடர்பாக அந்நாட்டின் மீது புதிய பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தானின் ஏவுகணைத் திட்டத்தை மேற்பார்வையிடும் அரசாங்கத்திற்குச் சொந்தமான தேசிய மேம்பாட்டு நிறுவனம் உள்ளிட்ட 4 நிறுவனங்கள் மீதே பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாகப் பாகிஸ்தான் வெளியுறவுதுறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில்,

நீண்ட தூரம் சென்று தாக்குதல் நடத்தும் ஏவுகணைத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள என்.டி.சி. மற்றும் 3 வர்த்தக நிறுவனங்களுக்கு அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடையானது துரதிஷ்டவசமானது மற்றும் ஒரு தலைபட்சமானது.

அமெரிக்க அரசின் இந்த செயற்பாடு மிகவும் வருத்தமளிக்கிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

# பரிசுத்த பாப்பரசரை சந்திக்கிறார் பைடன்



அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் பரிசுத்தபாப்பரசர் பிரான்ஸிஸை சந்திக்கவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஜோபைடனின் பதவிக்காலம் நிறைவடைவடைவதற்கு ஒரு மாத காலம் மாத்திரம் உள்ள நிலையில் ஜனவரி முதல்வாரத்தில் இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது

இந்த சந்திப்பு நிமித்தம் ஜனாதிபதி ஜோபைடன் ஜனவரி 9 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இத்தாலி செல்லவுள்ளார் எனவும் இதன்போது இத்தாலிய பிரதமர் ஜியோர்ஜியா மெலோனியை சந்தித்து கலந்துரையாடவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ரோம் நகரில் பரிசுத்த பாப்பரசரை சந்திக்கவுள்ளார் எனவும் இச் சந்திப்பின் போது உலகம் முழுவதும் அமைதியை பேணுதல் தொடர்பாகவும் உலகம் எதிர்கொண்டுள்ள முக்கிய சவால்கள் தொடர்பாகவும்கலந்துரையாடப்படவுள்ளதாகவும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

# ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற விபத்துகளில் 50 பேர் உயிரிழப்பு

தென்கிழக்கு ஆப்கானிஸ்தானில் நேற்று புதன்கிழமை இரவு நிகழ்ந்த இருவேறு வீதி விபத்துகளில் மொத்தம் 50 பேர் உயிரிழந்தனர்.

இதுகுறித்து கஜினி மாகாண ஆளுநரின் செய்தித் தொடர்பாளர் ஹபீஸ் உமர் நேற்று கூறும்போது,

“காபூல் - காந்தகார் நெடுஞ்சாலையில் நேற்று புதன் கிழமை இரவு பயணிகள் பஸ்ஸும் எண்ணெய் டேங்கர் லொறியும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இதுபோல் இதே நெடுஞ்சாலையின் மற்றொரு இடத்தில் பயணிகள் பஸ்ஸும் சரக்கு லொறியும் மோதிக்கொண்டன. இவ்விரு விபத்துகளிலும் பெண்கள், குழந்தைகள் உட்பட மொத்தம்



50 பேர் உயிரிழந்தனர். மேலும் 76 பேர் காயம் அடைந்துள்ளனர்.

பக்கங்கள் 03

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 20/12/2024

## கனடிய டொலரின் பெறுமதியில் வீழ்ச்சி

அமெரிக்க டொலருக்கு நிகரான கனடிய டொலரின் பெறுமதியில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டின் பின்னர் முதல் தடவையாக கனடிய டொலர் ஒன்றின் 02




# கனடாவில் வாகன திருட்டு சம்பவம்; தமிழ் இளைஞன் உட்பட 5 பேர் கைது

***கனடாவில் வாகன திருட்டு தொடர்பில் தமிழ் இளைஞன் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.***

***இந்த சம்பவத்தில் நோர்த் யோர்க்கை சேர்ந்த 22 வயதான யோகேஷ் குமார், 22 வயதான அஜ் பிரீத் சிங், 23 வயதான கலிடானைச் சேர்ந்த 25 வயதான அம்ரித்பால் சிங், 23 வயதான சுமித் சுமித் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.***

இந்தக் கும்பல் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கலிடோ பகுதியிலிருந்து திருடப்பட்ட வாகனம் ஒன்று ஒன்ராறியோவுக்குள் பிரவேசித்த வேளையில் அது திருடப்பட்ட வாகனம் என பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

இந்த நிலையில், 5 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ரொறான்ரோவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

ரொறன்ரோவில் இடம் பெற்ற வீதி விபத்தில் பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ரொறன்ரோ வடமேற்கு பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாகனம் ஒன்று மோதியதால் பாதசாரி உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

ரொறன்ரோவின் வெஸ்டன் மற்றும் ரொஜர்ஸ் வீதிகளுக்கு அருகாமையில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயம் அடைந்திருந்த பாதசாரியை மீட்டு முதலுதவிகள் வழங்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனினும் காயமடைந்த நபர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.




இந்த சம்பவத்துடன் தொடர்பு உடையதாக சந்தேகிக்கப்படும் டிரக் வண்டியின் சாரதியிடம் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.



# சுமார் மூன்றில் ஒரு கனேடியர்கள் பயண மோசடிகளில் சிக்குகின்றனர்

## கருத்துக் கணிப்பில் தகவல்

சுமார் மூன்றில் ஒரு கனேடியர்கள் பயண மோசடிகளில் சிக்குகின்றனர் என கருத்து கணிப்பு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.இந்த கருத்து கணிப்பானது, ப்ளைட் சென்டர் கனடா என்ற நிறுவனத்தினால் மேற்கொள் ளப்பட்டுள்ளது. இந்த மோசடிகள், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட் பத்தைப் பயன்படுத்தி இடம்பெற்றுள் ளன என கண்டறியப்பட்டுள்ளது.

அதன்போது, பயண முகவர்கள் போன்று தோன்றி இணை வழியின் ஊடாக கனேடியர்கள் ஏமாற்றப் படுகின்றனர்எனதெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், இவ்வாறான மோசடிகளில் இருந்து விழிப்புடன் இருக்ககுமாறு துறைசார் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



## கனடிய..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுமதி 0.70 அமெரிக்க டொலரை விடவும் குறைந்துள்ளது.

கோவிட் பெருந்தொற்று நிலவிய காலத்தில் இவ்வாறு டொலரின் பெறு மதி வீழ்ச்சியை பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிதி அமைச்சராக கடமையாற்றிய கிறிஸ்டியா ப்ரீலாண்ட் பதவி விலகியுள்ள நிலையில் இவ்வாறு டொலரின் பெறுமதியில் வீழ்ச்சி பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடிய ஏற்றுமதிகள் மீது 25 வீத வரி விதிக்கப்படும் என அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ராம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார்.இவ்வா றான காரணிகளுக்கு மத்தி யில் கன டிய டொலரின் பெறுமதியில் வீழ்ச்சி பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# கனடாவின் பீல் பிராந்தியத்தில் சட்டவிரோத ஆயுதங்கள் மீட்பு

கனடாவின் பீல் பிராந்தியத்தில் அதிகளவு சட்டவிரோத ஆயுதங்கள் மீட்கப்படுகின்றன என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பிராந்தியத்தில் ஒவ்வொரு 36 மணித்தியாலங்களுக்கு ஒரு தடவையும் ஆயுதமொன்று மீட்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆண்டில் இதுவரையில் 205 சட்டவிரோத ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுவரையில் ஒரு ஆண்டில் கைப்பற்றப்பட்ட அதிகளவான சட்டவிரோத ஆயுதங்கள் இந்த ஆண்டில் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டை விடவும் இந்த ஆண்டில் சுமார் 60 ஆயுதங்கள் கூடுதலாக கைப்பற்றப்பட்டுள்ளன என பீல் பிராந்திய பொலிஸ் பிரதானி நிசான் துரையப்பா தெரிவித்துள்ளார்.

பீல் பிராந்தியத்தில் இந்த ஆண்டில் சுமார் 147 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனவும் இது கடந்த ஆண்டை விடவும் 70 வீத அதிகரிப்பு என்றும் தெரிவித்துள்ளார்.




# இரு பொலிஸார் மீது பாலியல் குற்றச்சாட்டு

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாலியல் குற்றச் செயல்களில் ஈடுபட்டனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பெண் ஒருவரை இவ்வாறு இரண்டு உத்தியோகத்தர்கள் துஷ்பிரயோகம் செய்தனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வான்கூவார் தீவுகள் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடமை நேரத்தில் மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாலியல் குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளனர்.

43 வயதான மெத்திவ் போல் மற்றும் 40 வயதான ரயன் ஜோன்ஸ்டன் ஆகியோர் இவ்வாறு குற்றச் செயலில் ஈடுபட்டனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்த சம்பவம் இடம்பெற்றதாகவும், சந்தேக நபர்கள் இருவரும் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பாலியல் குற்றச் செயல் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.